# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8035209

1. District : Thanjavur  PS: V&AC  Year: 2017  FIR No.: 14/2017  Date: 28/11/17
   மாவட்டம்  காவல்நிலையம்  ஆண்டு  மு.த.அ. எண்  நாள்

2. (i) Act சட்டம்: 102 Crpc and  Sections பிரிவுகள்: 13(1)(d) R/w
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்: 13(2) of PC Act 1988
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :  Date from :  Date to : 28/11/17
   குற்ற நிகழ்வு நாள்  நாள் முதல்  நாள் வரை
   Time Period :  Time from :  Time to :
   நேர அளவு  நேரம் முதல்  நேரம் வரை
   (b) Information Received at PS. Date : FIR/28/11/17  Time : 2100 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்  நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 28/11/17  Time : 2100 hrs
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 5 km North
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number :  (b) Address : TNCSC Godown Nilagiri Thergu Thottam Thanjavur
   முறைக் காவல் எண்  முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :  District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Maheswaran  (b) Father's/ Husband's Name :
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth :  (d) Nationality :  (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு  நாட்டினம்  வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue :  Place of Issue :
   வழங்கப்பட்ட நாள்  வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation :  (g) Address : மாவட்ட ஆய்வு குழு அலுவலர் (பொறுப்பு) தஞ்சாவூர் நாகப்பட்டினம் தஞ்சாவூர், திருவாரூர், மாவட்டங்கள்.
   தொழில்  முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) Tmt. G. Anbumani, Bill Clerk, TNCSC, Nilagiri Thergu Thottam Thanjavur (2) Tr. Cibisakravarthy, J. Asst., TNCSC Godown (3) Tr. D. Selvarajan JQI, TNCSC Godown, Nilagiri Thergu Thottam, (4) Tr. Kumar, loadman, TNCSC (5) Tr. Selvam, loadman, TNCSC, (6) Tr. Rajasekar loadman, TNCSC, Godown, Nilgari, Thergu Thottam, Thanjavur

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

2

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

இன்று 28.11.2017ம் தேதி 21.00 மணிக்கு, தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, தஞ்சாவூர் ஆய்வுக் குழு அலுவலர் திரு.எஸ்.மகேஸ்வரன் அவர்கள் அளித்த அறிக்கை மீது வழக்கு பதிவு செய்த விபரம்: அனுப்புநர் திரு.க.மகேஷ்வரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் (இருப்பு), தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள்.பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர். அம்மா, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகிய நானும், துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.மா.சுமதி மற்றும் எனது குழுவுடன், தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் காண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து 28.11.2017-ம் தேதி மாலை 18.00 மணி முதல் 20.00 மணிவரை TNCSC குடோன், நீலகிரி தெற்கு தோட்டம், தஞ்சாவூர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையின்போது பில் கிளார்க் திருமதி.G.அன்புமணி என்பவரிடமிருந்து ரூ.800/-, திரு.சிபிச்சக்கரவர்த்தி, இளநிலை உதவியாளர் என்பவரிடமிருந்து ரூ.1700/-, திரு.D.செல்வராஜ், இளநிலை தர ஆய்வாளர் என்பவரிமிருந்து ரூ.850/- ஆக மொத்தம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 28.11.17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

(signature) 28/11/17
(R. TAMIL SELVI)
Inspector of Police
VSAC, Thanjavur.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் …………………
Rank: நிலை ………………… No. எண் ………

ரூ.3350/- கணக்கில் வராத தொகை மற்றும் மாமூல் பணம் என்று வசூல் செய்து வைத்திருந்த லோடுமேன் திரு.குமார் என்பவரிடமிருந்து ரூ.5720/-, லோடுமேன் திரு.செல்வம் என்பவரிடமிருந்து ரூ.400/-, லோடுமேன் திரு.ராஜசேகர் என்பவரிடமிருந்து ரூ.650/- ஆக மொத்தம் ரூ.6770/- மாமூல் என வசூலிக்கப்பட்டிருந்ததால் மேற்படி தொகைகள் கைப்பற்றப்பட்டது. இத்திடீர் சோதனையின் போது தயார் செய்யப்பட்ட, திடீர் சோதனை நடவடிக்கையுடன் மேற்படி கைப்பற்றப்பட்ட தொகை ரூ.10120/- ஆஜர்படுத்துகிறேன். இதுகுறித்து சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர். (இருப்பு) தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள். திடீர் ஆய்வு நடவடிக்கை விபரம்: 28.11.2017 ஆம் தேதி தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தினருடன் தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.எஸ்.மகேஸ்வரன் ஆகிய நான், எனது குழுவுடன், தஞ்சாவூர் நீலகிரி தெற்கு தோட்டம் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம், கிடங்கில் அரசு சிமெண்ட் மற்றும் பொது விநியோக திட்ட பொருட்கள் வழங்குவதில் கையூட்டு பெறுவதாக கிடைத்த தகவலின்பேரில் சுமார் மாலை 6.00 மணி அளவில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்ட போது என்னால் தயார் செய்யப்பட்ட நடவடிக்கை விபரம்

**இந்த திடீர் சோதனையின்போது உடனிருந்த அலுவலர்கள் விபரம்**:

1) ம.சுமதி, துணை ஆய்வுக்குழு அலுவலர்.
2) வி.ஜோஸ்பின் ஜெனிபர்மேரி, ஆய்வுக்குழு ஆய்வாளர்-2,
3) கு.ராஜ்குமார், ஆய்வுக்குழு ஆய்வாளர்-1,
4) R.தமிழ்செல்வி, காவல் ஆய்வாளர், V&AC, தஞ்சாவூர்.
5) R.வெங்கடேசன், காவல் ஆய்வாளர், V&AC, தஞ்சாவூர். (கையொப்பங்கள் உள்ளது)

தஞ்சாவூர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், கிடங்கு, நீலகிரி தெற்கு தோட்டம் அலுவலகத்தில் பணியில் ஆஜரில் இருந்தவர்கள்.

1) சி.பாலையன், த/பெ.சின்னையன், உதவி தர ஆய்வாளர், TNCSC, நீலகிரி தெற்கு தோட்டம்.
2) D.செல்வராஜன், Junior Quality Inspector, TNCSC குடோன், நீலகிரி தெற்கு தோட்டம்.
3) A.சிபிசக்கரவர்த்தி, இளநிலை உதவியாளர்,

4) N.சந்தான ராஜகோபாலன், Bill Clerk,

5) G.அன்புமணி, Bill Clerk,

6) S.ரவி, அலுவலக உதவியாளர் (பேக்கர்) (கையொப்பங்கள் உள்ளது)

இந்த திடீர் சோதனையின்போது அலுவலக வாயிலில் வடபக்கம் உள்ள உதவி தர ஆய்வாளரின் அலுவலக அறையில் உதவி தர ஆய்வாளர் திரு.சி.பாலையன், இளநிலை உதவியாளர் A.சிபிசக்கரவர்த்தி, Bill Clerk G.அன்புமணி ஆகியோர் மற்றும் Elcot Computer operator திரு.பிரகதீஸ்வரன் ஆகியோர் இருந்தனர்.

திரு.சி.பாலையன், உதவி தர ஆய்வாளரை சோதனையிட அவர் வசம் ரூ.18350/- இருந்தது. அது குறித்து கேட்க, Impressed Advance ரூ.30000 22.11.17 அன்று தஞ்சாவூர் SRM அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டது எனவும், அதற்கான ரசீது 001570 என்ற ரசீதை காண்பித்தார். இந்த பணத்தில் சில்லறை செலவினங்கள் இதுவரை ரூ.9653/- ஆகி உள்ளது என்றும், அது தொடர்பான குறிப்புகளை Impressed Petty Case Register-ல் பதிவுகளை காண்பித்தார். இந்த செலவினங்கள் ரூ.9653/- போக ரூ.20,347/- பணம் இருக்க வேண்டும். ஆனால் ரூ.18350/- தான் உள்ளது. ரூ.2003/- குறைவாக (கையொப்பங்கள் உள்ளது) உள்ளதற்கு விளக்கம் கேட்க, சரியான விளக்கம் அளிக்கவில்லை. Bill Clerk திருமதி.G.அன்புமணி என்பவரிடம் ரூ.800/- இருந்தது. இந்த பணம் குறித்து விளக்கம் கேட்க, சரியான முகாந்திரம் சொல்லவில்லை. அதனால் இந்த பணம் ரூ.800/- கைப்பற்றப்பட்டது. திரு.சிபிசக்கரவர்த்தி, இளநிலை உதவியாளர் வசம் ரூ.1700/- இருந்தது. இது குறித்து இவரிடம விளக்கம் கேட்க, சரியான முகாந்திரம் சொல்லாததால், இந்த பணமும் கைப்பற்றப்பட்டது. திரு.பிரகதீஸ்வரன் Elcot computer operator வசம் ரூ.40/- இருந்தது. இது குறித்து விசாரிக்க இவர் இந்த பணம் அவருடைய சொந்தபணம் என்று கூறியதால் அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது.

குடோன் அலுவலகத்தின் வடபுறம் உள்ள குடோனின் வாயில் அமர்ந்திருத இளநிலை தர ஆய்வாளர் D.செல்வராஜன் என்பவரை சோதனையிட ரூ.850/- இருந்தது. இது குறித்து விசாரிக்க, இவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. அதனால் இந்த பணம் கைப்பற்றப்பட்டது. இங்கிருந்த திரு.சந்தானராஜகோபாலன் (கையொப்பங்கள் உள்ளது) பட்டியல் எழுத்தர் என்பவரிடம் ரூ.12/- இருந்தது. இது இவரது சொந்த பணம் என்பதால் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இங்கிருந்த Baker திரு.ரவி வசம்

ரூ.110/- இருந்தது. இது அவரது சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

அலுவலகத்தின் மேல்புறம் தெற்குபார்த்த நிலையில் உள்ள லோடுமேன்களின் ஓய்வு அறையை சோதனையிட திரு.குமார், S/o முனுசாமி என்பவர் வசம் ரூ.5720/- இருந்தது. திரு.செல்வம் S/o முனியாண்டி என்பவர் வசம் ரூ.400/- இருந்தது. திரு.ராஜசேகர், S/o பாலசுப்பிரமணியன் என்பவரிடம் ரூ.650/- இருந்தது. மேற்படி 3 லோடுமேன்களிடம் இருந்த ரூ.6770/- இருந்தது. இது குறித்து விசாரிக்க இந்த குடோனில் மொத்தம் 16 லோடுமேன்கள் வேலை செய்வதாகவும், திரு.மோகன், S/o பரமசிவம் என்பவர் இவர்களை வழிநடத்துவதாகவும், இவர்கள் இன்று காலையிலிருந்து சிமெண்ட் மற்றும் பொது விநியோக பொருட்கள் லோடு, unload செய்ததாகவும், P&T-க்கு 2 லாரி லோடு ஏற்றியதாகவும், (கையொப்பங்கள் உள்ளது) ரயில்வே, TCMS, RCS, TCWS, Hostel மாட்டுவண்டி, சரபோஜி ஆஸ்டல், CWC, சிமெண்ட் ஏற்றிவிட்டதற்கு ஏற்று கூலி, இறக்கியதற்கு என மாமூலாக பெற்ற தொகைதான் மேற்படி குமார், செல்வம், ராஜசேகர் ஆகியோர் வசம் இருந்த தொகையென்று தெரிவித்தார். இந்த மாமூல் தொகையை இன்றைய அலுவல் முடித்த பிறகு அனைத்து லோடுமேன்களும் பங்கிட்டு கொள்வது வழக்கம் என்று தெரிவித்தார். இந்த குடோனில் உள்ள 16 லோடுமேன்களுக்கும் SRM அலுவலககத்தால் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றும், அனைவருக்கும் வருகைப்பதிவேடு பராமரிக்கப்படுகிறது என்றும், ஒவ்வொரு நாளும் எவ்வளவு மூட்டைகள் Load, Unload செய்யப்படுகிறது என்பதற்கேற்றவாறு லோடுமேன்களுக்கு, அரசால் ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனாலும் தினந்தோறும் அரசு ஊதியமல்லாது மூட்டைகள் ஏற்றுவதற்கு மாமூல் வசூலிப்பது வழக்கம் என்றும், இதே போன்று அனைத்து குடோன்களிலும் நடக்கிறது என்றும் தெரிவித்தார். மேற்படி ரூபாய் 6770/- மாமூல் தொகை என்று மேற்படி லோடுமேன்களால் தெரிவிக்கப்பட்டதால் இந்த தொகையும் கைப்பற்றப்பட்டது. மற்ற லோடுமேன்கள் (கையொப்பங்கள் உள்ளது) தங்களது சொந்தபணம் என்று ஆஜர்படுத்திய தொகைகளை மீண்டும் அவர்கள் வசமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் இந்த லோடுமேன்கள் ஓய்வு அறையில் 26 பிளாஸ்டிக் பைகளில் 5 கிலோ வீதம் துவரம்பருப்பு இருந்தது. அது குறித்து உதவி தர ஆய்வாளரிடம் சி.பாலையன் அவர்களிடம் கேட்க, அவர் தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்தார். குடோன் வாசலில் பணியிலிருந்த இளநிலை தர ஆய்வாளர் D.செல்வராஜன் அவர்களை விசாரிக்க, அவர் லோடுமேன்களுக்கு மற்றும் துப்புரவு

பணி செய்பவர்களுக்கு கொடுத்த பருப்பு எனவும், இவ்வாறு மாதந்தோறும் வழங்குவது இயல்பு எனவும் தெரிவித்தார். மேற்படி 26 பருப்பு பைகளும் (130 கிலோ) உதவி தர ஆய்வாளர் சி.பாலையன் அவர்கள் வசம், அரசுக்கணக்கில் சேர்க்க அறிவுறுத்தப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கை 28.11.2017 ஆம் தேதி இரவு 8.00 மணி அளவில் முடிக்கப்பட்டது. (Sd/- 1) C. பாலையன், 28.11.17 AQI 2) D.செல்வராஜன் 28.11.17 JQI 3)Sibichakkaravarthy 28.11.17 JA 4) N.சந்தானாராஜகோபாலன் 28.11.17 Bill Clerk 5) G.அன்புமணி 28.11.17 Bill Clerk 6) S.ரவி 28.11.17 எடையாளர் 1) M.குமார் 28.11.17 2) ஆ.மு.செல்வம் 28.11.17 3) B.ராஜசேகர், 28.11.17 லோடுமேன். 4) P.மோகன், 28.11.17 லோடுமேன் 1) V.ஜோஸ்பின் ஜெனிபர் மேரி, 28.11.17 ஆய்வுக்குழு அலுவலர் 2) ம.சுமதி, 28.11.17 துணை ஆய்வுக்குழு அலுவலர் 3) கு.ராஜ்குமார், 28.11.17 ஆய்வுக்குழு அலுவலர். 4) R.தமிழ்ச்செல்வி, 28.11.17 Inspector, V&AC, Thanjavur. 5) S.மகேஸ்வரன், 28.11.17 ICO/ Thanjavur.

அம்மா, மேற்படி அறிக்கையின் மீது தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/2017 பிரிவு 102 கு.வி.மு.ச. மற்றும் பிரிவு 13(1)(d) r/w 13(2) ஊ.த.சட்டம் 1988 படி 28.11.2017 ம் தேதி இரவு 9.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. (Sd/- R.தமிழ்ச்செல்வி, 28.11.17 Inspector, V&AC, Thanjavur)

முதல் தகவல் அறிக்கையின் அசலையும் மற்றும் திடீர் ஆய்வு நடவடிக்கைகள் ஆகியவற்றையும் கும்பகோணம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்றை நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

28/11/17
Inspr/V&AC/TAN.